**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30-ஆம் நாள் திங்கட் கிழமை**

**GOP. No.179/2024**

**(TN CD 01-010911-2024)**

(இம்மனுவானது இளவர் சரனேஷ்குமார், வயது-15 சம்மந்தமாக)

1. செந்தில்குமார்
2. சந்திரகலா
3. அஞ்சலை .. மனுதாரர்கள்

/எதிராக/

எவருமில்லை .. எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பு 06.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ப்பி. இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனுவில் எதிர்மனுதாரர் எவரும் இல்லை என்பதால், மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இம்மனுவில் முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

இளவர் சரனேஷ்குமார் பெயரில் வாங்கப்பட்ட மனுச் சொத்தை விற்பனை செய்ய மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கியும், இம்மனுவிற்கு தக்கதென கருதும் இதர உத்தரவு பிறப்பித்தும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள் U/s. 8 (2) (a) of Hindu Minority and

Guardianship Act 1956 and Sec. 28 of the Guardian and Wards Act 1890 -ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>** :

2. 1-ஆம் மனுதாரரின் மனைவி தான் 2-ஆம் மனுதாரர். 1-ஆம் மனுதாரரின் தாயார் தான் 3-ஆம் மனுதாரர். 1,2 மனுதாரர்களின் மகன் இளவர் சரனேஷ்குமார் சார்பாக மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். 1,2 மனுதாரர்களின் மகன் இளவர் சரேனஷ்குமார் பண்ருட்டி வட்டம், மருங்கூர், கொள்ளுக்காரன்குட்டை கிராமத்தில் உள்ள வள்ளலார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படிக்கிறார். 1-ஆம் மனுதாரருக்கும், அவரது உடன் பிறந்த சகோதரர் செல்வகுமார், சகோதரி செல்வி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்துக்கு, 1-ஆம் மனுதாரர் மற்ற பங்குதாரர்களுக்கு தக்க மறுபயன் கொடுத்து தனது தாயாரான 3-ஆம் மனுதாரரை பாதுகாவலராக நியமித்து தனது மகன் சரனேஷ்குமார் பெயரில் 09.05.2016 அன்று கிரையம் வாங்கியுள்ளார். அந்த ஆவணம் காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1265/2016 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1-ஆம் மனுதாரருக்கு சொத்திற்கு ஒரு பங்குதாரர் என்பதால் மேற்கண்ட கிரைய பத்திரத்தில் 1-ஆம் மனுதாரரும் கையெழுத்திட்டுள்ளார். 1-ஆம் மனுதாரர் மாலத்தீவில் வேலை செய்து வருகிறார். மனுச் சொத்து விவசாய நிலம் என்பதால், இளவர் சரனேஷ்குமார் சார்பாக மனுதாரர்களால் சரியாக பராமரிக்க இயலவில்லை. மனுச் சொத்தின் புல எண்ணின் இதர இடத்தில் 1-ஆம் மனுதாரின் சகோதரர் செல்வக்குமாரின் வீடும் நிலமும் உள்ளது. மனுச் சொத்தில் உள்ள முந்திரி மரங்களை மனுதாரரின் சகோதரர் செல்வக்குமாரும் அவரது குடும்பத்தினரும்

அவர்களது வீடு மற்றும் நிலத்துடன் சேர்த்து மனுதாரர்களின் அனுமதியுடன் பராமரித்து வருகின்றனர். மனுதாரர்கள் நேரடியாக மனுச் சொத்தை பராமரிப்பது எந்த வகையிலும் இளவர் சரனேஷ்குமாருக்கு லாபகரமாக இல்லை. மனுச் சொத்தால் இளவர் சரனேஷ்குமாருக்கு எந்தப் பலனும் இல்லை. மனுச் சொத்தை 1-ஆம் மனுதாரரின் சகோதரர் செல்வக்குமாருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ, நல்லவிலைக்கு விற்றால் அதில் வரும் பணத்தைக் கொண்டு மனுதாரர்கள் பராமரிப்பதற்கு சௌகரியமான இடத்தில் கூடுதலான பணம் கொடுத்து இளவர் சரனேஷ்குமார் பெயரில் நிலம் வாங்கினால் அது இளவர் சரனேஷ்குமாரின் கல்விக்கும், எதிர்காலத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று மனுதாரர்கள் முடிவு செய்துள்ளார்கள். எனவே, மனுச் சொத்தை விற்க அனுமதி வேண்டி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

3. இம்மனுவில் எதிர்மனுதாரர் எவரும் இல்லை. மனுதாரர்கள் தரப்பில், இம்மனு மீது ஆட்சேபணை ஏதேனும் இருந்தால் தெரிவிக்கக்கோரி, தமிழ் செய்தித் தாளில் அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு கொடுக்கப்பட்டும், இம்மனுவில் எவரும் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில், 2-ஆம் மனுதாரர் ம.சா.1-ஆகவும், 3-ஆம் மனுதாரர் ம.சா.2-ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்** :

மனுதாரர்கள் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

5. இளவர் சரனேஷ்குமார் பெயரில் வாங்கப்பட்ட மனுச் சொத்தை விற்பனை செய்ய மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கியும், இம்மனுவிற்கு தக்கதென கருதும் இதர உத்தரவு பிறப்பித்தும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள் U/s. 8 (2) (a) of Hindu Minority and Guardianship Act 1956 and Sec. 28 of the Guardian and Wards Act 1890 -ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில், 2-ஆம் மனுதாரர் ம.சா.1-ஆகவும், 3-ஆம் மனுதாரர் ம.சா.2-ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. ம.சா.1 மனு சாராம்சத்தை ஒத்திசைந்து சாட்சியமளித்து, 1-வது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் ம.சா.ஆ.1-ஆகவும், 2-ஆம் மனுதாரர் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் புகைப்பட நகல் ம.சா.ஆ.2-ஆகவும், 3-ஆம் மனுதாரரின் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் புகைப்பட நகல் ம.சா.ஆ.3-ஆகவும், இளவர் சரனேஷ்குமாரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் ம.சா.ஆ.4-ஆகவும், இளவர் சரனேஷ்குமாருக்கு 2024-2025-ஆம் கல்வியாண்டில் அவர் படித்து வந்த கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மருங்கூர், கொள்ளுக்காரன்குட்டை, வள்ளலார் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் வழங்கிய கல்விச் சான்றிதழ் (Study certificate) ம.சா.ஆ.5-ஆகவும், இளவர் சரேனஷ்குமார் பெயரில் உள்ள மனுச் சொத்திற்கான பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6-ஆகவும், மனுச் சொத்திற்கான இளவர் சரனேஷ்குமார் பெயரில் உள்ள பட்டா எண்.3055-க்கான சிட்டாவின் கணினி நகல் ம.சா.ஆ.7-ஆகவும், மனுச் சொத்திற்கான அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின் பதிவிறக்க நகல்

ம.சா.ஆ.8-ஆகவும் குறியீடு செய்து, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் பிரார்த்திக்கிறார். 1-ஆம் மனுதாரரின் தாயாரும், 2-ஆம் மனுதாரரின் மாமியாரும், இளவர் சரனேஷ்குமாரின் தந்தைவழி பாட்டியுமான 3-ம் மனுதாரர் ம.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 அஞ்சலை தனது சாட்சியத்தில், மனுச் சொத்தை தனது மற்றொரு மகன் செல்வக்குமாருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ, நல்ல விலைக்கு விற்றால் அதில் வரும் பணத்தைக் கொண்டு தாங்கள் பராமரிப்பதற்குசௌகரியமான இடத்தில் கூடுதலான பணம் கொடுத்து இளவர் சரனேஷ்குமார் பெயரில் நிலம் வாங்கினால் அது இளவர் சரனேஷ்குமாரின் கல்விக்கும், எதிர்காலத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று தாங்கள் முடிவு செய்துள்ளதாகவும், எனவே, மனுச் சொத்தை விற்க அனுமதி வேண்டி தாங்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, இளவர் சரனேஷ்குமார் பெயரில் வாங்கப்பட்ட மனுச் சொத்தை விற்பனை செய்ய அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார். இம்மனுவில் எதிர்மனுதாரர் இல்லை.

6. மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டன. இம்மனுவில் முன்னிடப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்படி சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்கையில், 1,2 மனுதாரர்கள் முறையே கணவன் மனைவி ஆவர் என்பதும், மேற்படியார்களுக்கு இளவர் சரனேஷ்குமார் 10.07.2009 அன்று மகனாக பிறந்துள்ளார் என்பதும், சரனேஷ்குமாருக்கு தற்போது 17 வயதாகபோகிறது என்பதும், தற்போதும் சரனேஷ்குமார் இளவர் என்பதும், 3-ஆம் மனுதாரர் , 1-வது மனுதாரரின் தாயார், 2-ஆம் மனுதாரரின் மாமியார், இளவர் சரனேஷ்குமாரின் தந்தை வழி பாட்டியாவார் என்பதும், மனுச் சொத்தானது, 1-வது மனுதாரர் மற்றும் அவருடைய

சகோதரர் செல்வக்குமார், சகோதரி செல்வி மற்றும் 3-வது மனுதாரரின் கணவர் பழனி என்பவருக்குப் பாத்தியமாய் இருந்து, அவர் இறப்பிற்கு பிறகு, வாரிசுகள் என்ற முறையில், அடைந்து, 1-ஆம் மனுதாரர், அவருடைய சகோதரர் செல்வக்குமார் மற்றும் சகோதரி செல்வி ஆகியோர், மனுச் சொத்தில் உள்ள அவர்களது பாகத்தை பொறுத்து, 1-ஆம் மனுதாரரின் மகன் இளவர் சரனேஷ்குமாரின் பெயரில், இளவர் சரனேஷ்குமாருக்கு 1-ஆம் மனுதாரரின் தாயாரும், இளவரின் தந்தை வழி பாட்டியுமான 3-ஆம் மனுதாரர் அஞ்சலையை கார்டியனாக கண்டு, 09.05.2016 அன்று ரூ.50,000/-க்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் வாயிலாக கிரையம் கொடுத்துள்ளனர் என்பதும், கிரையப் பத்திரத்தின்படி மனுச் சொத்தானது இளவர் சரனேஷ்குமாருக்குப் பாத்தியமான சொத்து என்பதும், மனுச் சொத்திற்கான பட்டாவும் இளவர் சக்திவேல் பெயரில் உள்ளது என்பதும், இந்த மனு தாக்கல் செய்தபோது, இளவர் சரனேஷ்குமார், 2024-2025-ஆம் கல்வியாண்டில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மருங்கூர், கொள்ளுக்காரன்கொட்டை, வள்ளலார் மெட்ரிக்குலேஷன் மேல்நிலையப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார் என்பதும், 1,2 மனுதாரர்கள் இளவர் சரனேஷ்குமாரின் இயற்கை காப்பாளர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பதும், 1-ஆம் மனுதாரர் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார் என்பதும், மனுதாரர்கள் இளவர் சரனேஷ்குமாரை தங்கள் பாதுகாவலில் வைத்து படிக்க வைத்து, பராமரித்து சவரிட்சித்து வருகின்றனர் என்பதும் தெரிய வருகிறது. தற்போது, மனுதாரர்கள் தங்கள் மனுவிலும், ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆகியோரின் சாட்சியத்திலும், 1-ஆம் மனுதாரர் மாலத்தீவில் வேலை செய்து வருவதாகவும், மனுச் சொத்து விவசாய நிலம் என்பதால், இளவர் சரனேஷ்குமார் சார்பாக மனுதாரர்களால் சரியாக பராமரிக்க இயலவில்லை என்றும், மனுச் சொத்தின் புல எண்ணின் இதர இடத்தில் 1-ஆம் மனுதாரின் சகோதரர் செல்வக்குமாரின் வீடும் நிலமும் உள்ளன

என்றும், மனுச் சொத்தில் உள்ள முந்திரி மரங்களை மனுதாரரின் சகோதரர் செல்வக்குமாரும் அவரது குடும்பத்தினரும் அவர்களது வீடு மற்றும் நிலத்துடன் சேர்த்து மனுதாரர்களின் அனுமதியுடன் பராமரித்து வருகின்றனர் என்றும், மனுதாரர்கள் நேரடியாக மனுச் சொத்தை பராமரிப்பது எந்த வகையிலும் இளவர் சரனேஷ்குமாருக்கு லாபகரமாக இல்லை என்றும், மனுச் சொத்தால் இளவர் சரனேஷ்குமாருக்கு எந்தப் பலனும் இல்லை என்றும், மனுச் சொத்தை 1-ஆம் மனுதாரரின் சகோதரர் செல்வக்குமாருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ, நல்ல விலைக்கு விற்றால் அதில் வரும் பணத்தைக் கொண்டு மனுதாரர்கள் பராமரிப்பதற்கு சௌகரியமான இடத்தில் கூடுதலான பணம் கொடுத்து இளவர் சரனேஷ்குமார் பெயரில் நிலம் வாங்கினால் அது இளவர் சரனேஷ்குமாரின் கல்விக்கும், எதிர்காலத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று மனுதாரர்கள் முடிவு செய்துள்ளதாகவும், எனவே, மனுச் சொத்தை விற்க அனுமதி வேண்டி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆட்சேபணை தெரிவிக்கும் வகையில் இம்மனுவில் எதிர்மனுதாரர் எவரும் இல்லை. மேலும், மனுதாரர்கள் தரப்பில், இம்மனு மீது ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்கக்கோரி, தமிழ் செய்தித் தாளில் அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு (General Notice) கொடுத்துள்ளார். இந்த மனுவின் மீது எவரும் ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களையும், பொது அறிவிப்பு கொடுத்தும் எவரும் ஆட்சேபணை தெரிவிக்காததையும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளையும், இளவர் சரனேஷ்குமார் அவர்களுடைய இயற்கை பாதுகாவலர்கள் மற்றும் பெற்றோர்களான 1,2 மனுதாரர்கள் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும், சவரட்சணையிலும் இருந்து வருவதையும்,

இளவர் சரனேஷ்குமாரின் நிகழ்கால மற்றும் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு, இளவர் பெயரில் உள்ள மனுவில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்ய இளவரின் இயற்கை பாதுகாவலர்களும், பெற்றோர்களுமான 1,2 மனுதாரர்களுக்கும், மற்றும் சாசன பாதுகாவலரான 3-ஆம் மனுதாரருக்கும் அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

7. முடிவாக, இளவர் **சரனேஷ்குமார்** பெயரில் உள்ள மனுச் சொத்தினை, இளவரின் இயற்கை காப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களான 1,2 மனுதாரர்களுக்கும், சாசன காப்பாளரான 3-ஆம் மனுதாரருக்கும் அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின்படி கிரையம் செய்து கொடுக்க 1 முதல் 3 மனுதாரர்களுக்கு அனுமதி அளித்தும், மனுதாரர்கள் இந்த உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் மேற்படி மனுச் சொத்தினை விற்று, அதன் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும், மேலும், மனுதாரர்கள் மேற்படி கிரையத் தொகையை, இளவர் **சரனேஷ்குமார்** உரிமை வயதை (attains majority) அடையும் வரை, ஏதேனும் ஒரு தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில், நிரந்தர வைப்பீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியை 3 மாதத்திற்கு ஒருமுறை நேரடியாக பெற்று, இளவரின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்றும், மேற்படி வங்கியானது, இளவர் **சரனேஷ்குமார்** பெயரில் தொடங்கப்பட்ட வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குண்டான வட்டியை இளவரின் வங்கி கணக்கில் நேரிடையாகச் செலுத்த வேண்டும் என்றும், இந்நீதிமன்றம் வேண்டும்பொழுது, மனுதாரர்கள் இளவரின் வரவு செலவுக் கணக்குகளைத்

தாக்கல் செய்ய வேண்டும் என்றும், இவ்வாறாக இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.30 19:31:44 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி** :

ம.சா.1 .. சந்திரகலா

ம.சா.2 .. அஞ்சலை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 30.08.2012 | 1-வது மனுதாரரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல். |
| ம.சா.ஆ.2 | .. | 2-ஆம் மனுதாரர் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் புகைப்பட நகல். |
| ம.சா.ஆ.3 | .. | 3-ஆம் மனுதாரரின் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் புகைப்பட நகல். |
| ம.சா.ஆ.4 | .. | இளவர் சரனேஷ்குமாரின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல். |
| ம.சா.ஆ.5 | 02.09.2024 | இளவர் சரனேஷ்குமாருக்கு 2024-2025-ஆம் கல்வியாண்டில் அவர் படித்து வந்த கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மருங்கூர், கொள்ளுக்காரன்குட்டை, வள்ளலார் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் வழங்கிய கல்விச் சான்றிதழ் (Study certificate). |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.6 | 09.05.2016 | இளவர் சரேனஷ்குமார் பெயரில் உள்ள மனுச் சொத்திற்கான பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.7 | 16.10.2024 | மனுச் சொத்திற்கான இளவர் சரனேஷ்குமார் பெயரில் உள்ள பட்டா எண்.3055-க்கான சிட்டாவின் கணினி நகல், |
| ம.சா.ஆ.8 | 01.07.2024 | மனுச் சொத்திற்கான அரசு வழிக்காட்டு மதிப்பீட்டின் பதிவிறக்க நகல். |

**எதிர்மனுதாரர்** : இல்லை

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.30 19:31:52 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.